முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில்
ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால
பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் மாசி மாதம் 27 திகதி முதல்
சோபகிருது வருடம் பங்குனி மாதம் 04 திகதி வரை
(10.03.2024 ஞாயிறு முதல் 17.03.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலிபகவான் அழிவின் வேலையை
கருணையின்றி புவியின் மேலே
பழிபாவம் கருதா செய்திட்டாலும்
பாதுகாப்பேன் இந்தப் பேருலகைஎன
2. என ஞானபண்டிதன் அம்சமாக
இணையிலா ஞான அவதாரம்
ஞானதேசிகனாக எடுத்து அருளும்
ஞானியே அரங்கனே உமைபோற்றி
3. போற்றியே அகத்திய மகரிஷியும்
புகலுவேன் அரங்கன் நீ கேட்க
ஆற்றல்மிகு இந்தியா தமிழகத்தில்
அச்சமற சோபகிருது சால்திங்கள் இருபானேழ் திகதிமேல்
4. மேலாக சேல்திங்கள் சதுர்திகதி வரை
மேதினியில் நடக்கும் நிகழ்வாக
கோலமதாய் வருங்கால பலன்குறித்து
கூறிடுவேன் வார ஆசிதனை
5. தன்னிலே தேர்தல் களம்காண
தமிழக இந்திய கட்சிகள்
எண்ணமதில் கொள்கை வரையறை
எதனையும் கடந்து மறந்துமே

6. மறந்துமே காற்றில் பறக்க விட்டு
மக்களை வஞ்சிக்கும் வண்ணம்
சிறந்த கூட்டணி எனஉருவாக்கி
செயம் கொள்ள எத்தனிக்குமே
7. ஆகுமே அளவிலா தனபேரமும்
ஆசை வாக்குறுதிகளென
மிகையாக விட்டு மக்களை
மேலும் மேலும் ஏமாற்ற முயலுமே
8. முயலுகின்ற இந்தவித செயல்கள்
முடிவுக்கு வருகின்ற படியாக
தயவு வடிவான ஞானவான்கள்
தருமவான்கள் படை சேவைகள்
9. சேவைகள் எனமக்களிடை எழுச்சியாக
செப்பிடுவேன் மாற்றம் நிகழுமப்பா
அவனியில் அன்னதனால் ஆளுமைகள்
அவசியம் மக்கள் தேவை உணர்ந்து
10. உணர்ந்துமே பகட்டை நீக்கி
உண்மைபட நேர்மைபட தயவுபட
ஞானமோடு தேர்தல் களம்காண
நல்லாட்சி ஞானஆட்சியாக மாறுமப்பா
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மாசி மாதம் 27ம் நாள் 10.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் 04ம் நாள் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள நிகழ்வுகள் :

கலியுக பகவான் தமது அழிவின் செயல்களை மக்கள் மீது சிறிதும் கருணையின்றி இப்புவியில் பழிபாவத்திற்கு அஞ்சாமல் அளவிலாது செய்து மக்களை கொடுமைப்படுத்தினாலும் இந்த பூமியை உறுதியுடன் பாதுகாப்பேன் என்றே உறுதி பூண்டு முருகப்பெருமானின் அருளை வேண்டி பெற்று முருகப்பெருமானின் அம்சமாக ஞானம் பெற்று மக்களை வழிநடத்தும்

ஞானகுருவாக ஞானதேசிகனாக அவதரித்திட்ட மகாஞானியே ஆறுமுகஅரங்கமகா தேசிகனே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் அரங்கா தாம் கேட்க இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் மாசி மாதம் **27**ம் நாள் **10.03.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் பங்குனி மாதம் **04**ம் நாள் **17.03.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உலகம் அறிய உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தேர்தலிலே வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே முடிவை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இந்திய தேசத்திலே உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் கொள்கைகளையும் வரையறைகளையும் கடந்து, மறந்து மக்களை குறித்து கவலை கொள்ளாமல் இதுதான் சிறந்த கூட்டணி என்று உருவாக்கி வெற்றி கொள்ள முடிவு செய்து செயல்படுமப்பா.

அவ்வித கூட்டணி பேரத்திலே அளவிலாது பொருள் பேரமாக வைத்தும் ஆசை வாக்குறுதிகளை அளவிலாது மக்களுக்கு அளித்தும் மக்களை மேலும் மேலும் ஏமாற்ற முயலுமப்பா.

ஆயினும் இந்தவித செயல்கள் ஒரு முடிவிற்கு வருவதற்கு ஆரம்பமாக தயவே வடிவான ஞானவான்கள், தருமவான்கள் அவர்களை சார்ந்தவர்கள், தொண்டுள்ளம் கொண்ட மக்கள் என பலவிதமாக மக்களிடையே எழுச்சியாக உருவாகுவார்களப்பா. மாற்றங்கள் உண்டாகுமப்பா.

ஆதலினாலே ஆட்சி புரிய விரும்புகின்றோர் அவசியம் மக்களின் தேவைகளை உணர்ந்து பகட்டான வாக்குறுதிகளை நீக்கி உண்மையுடனும், நேர்மையுடனும், தயவுடனும் மக்களிடம் நடந்து அறிவுப்பூர்வமாக ஆக்கப்பூர்வமாக தேர்தல் களம் கண்டால் நல்லாட்சி உருவாகும் அதுவே ஞான ஆட்சியாகவும் மாறி நாடு சிறப்படையுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–